**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 159/மா/2022**

**நாள் : 01.11.2022**

திரு.R. மயில்சாமி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர், மண்டலம்–02,
மதுரை மாநகராட்சி, மதுரை – எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5–ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 25.07.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.07.2022-ல் பெறப்பட்டு 159/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5–ல் வசிக்கும் திரு.R. மயில்சாமி என்பவர் தனது முறையீட்டுமனுவில் ,கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

" மதுரை மாநகராட்சி, வார்டு 1, மண்டலம்–2 (வடக்கு) மதுரை, வடக்கு தாலுக்கா விளாங்குடி I பிட் மற்றும் II பிட்டில் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் உள்ளதா என்றும் அதன் புல எண்கள் மற்றும் விஸ்தீரனம் போன்றவைகளை தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 பிரிவு

6(1)–ன் கீழ் தகவல் கேட்டு இருந்தேன். ஆனால் மாநகராட்சி செயற்பொறியாளர்(திட்டம்) தகவல் தர மறுத்து விட்டார். பின்பு முதல் மேல் முறையீட்டு மனு பிரிவு 19(1)ன் கீழ் தாக்கல் செய்தேன். அப்போதும் தகவல் வழங்கவில்லை. அடுத்ததாக மாண்புமிகு தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் சட்டபிரிவு 18(1)–ல் புகார் செய்து பிரிவு20(1), 20(2), 19(8) (b)–ல் நடவடிக்கை கோரிய பின்பு மாண்புமிகு தகவல் ஆணையத்தின் முன்பு நேரடி விசாரணை செய்ததின் பெயரில் மாநகராட்சி மதுரை செயற்பொறியாளர்(திட்டம்)(பொது) அவர்கள் விளாங்குடி I பிட் மற்றும் II பிட்டின் மதுரை மாநகராட்சிக்கு இடம் இருப்பதாகவும் அதில் சில இடங்களை தனிநபர்களுக்கு பட்டா வழங்கியதாக தெரிவித்து தனக்கு 11.04.2022ல் கடிதம் அனுப்பியுள்ளார்.

மதுரை மாநகராட்சி (அரசு)க்கு சொந்தமான இடங்களை புல எண் 107(விளாங்குடி பிட் I)ல் பட்டா வழங்கப்பட்டது எனவும் புல எண் 107/2A (விளாங்குடி பிட் 2) பட்டா எண் 9332, விளாங்குடி 1 பிட் புல எண் 107/2B1 B பட்டா எண் 3179, விளாங்குடி பிட் 1 புல எண் 107/2B2, பட்டா எண் 3200 இவைகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. பட்டா தனி நபர்களுக்கு வழங்கியதும் மேலும் இன்னும் சில புல எண்களில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புல எண்களில் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் பட்டா வழங்கியதில் பல லட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் மாநகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் இந்த பட்டா மாறுதலில் மாநகராட்சி அதிகாரிகளுக்கு பங்கு உண்டு என்பது தெளிவாகிறது. விளாங்குடி பகுதிகளில் 1 செண்ட் இடம், 10 லட்சம் முதல் 12 லட்சம் வரை தற்போது சந்தை மதிப்பாகும். எனவே மேற்படி புல எண்களில் தனி நபர்களுக்கு பட்டா வழங்கிய மதுரை மாநகராட்சி அதிகாரிகள் யார் என்பதை கண்டறிந்து துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டும் கொடுக்கப்பட்ட பட்டாவை இரத்து செய்தும் விளாங்குடி I பிட் II பிட்டில் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் வீடு கட்டி இருப்பவர்களை ஆக்கிரமிப்புகளை விரைவாக அகற்றிதர உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறேன் ” என்று தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ 11.08.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 06.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 11.10.2022 அன்று நேரடி விசாரணைக்கு நாகர்கோவில் முகாமில் ஆஜராகுமாறு அழைக்கப்பட்டனர்.

4) மனுதாரர் 11.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“மதுரை மாநகராட்சி, வார்டு–1, மண்டலம்–2 (வடக்கு) மதுரை விளாங்குடி பிட்1 மற்றும் 2–ல் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்கள் புல எண் 107/ 2B1A – 109/8A –

109/8C – 109/10A மற்றும் 109-10C மற்றும் புல எண்.107/2B2 (விளாங்குடி–1) ஆகியவற்றில் மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் (சுமார் 25 சென்ட்) தனி நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு அங்கு 3 வருடங்களுக்கு முன் தனி நபர்களால் வீடுகள் கட்டப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. மாநகராட்சியின் மெத்தனப்போக்கால் பல இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் மதுரை மாநகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

விளாங்குடி பிட் –1 மற்றும் 2ல் மாநகராட்சிக்கு சொந்தமான புல எண் 107-2B/1A மற்றும் 109/8A, 109/8C, 109/10A and 109/10C இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றிடவும் மேற்படி புல எண்களில் தனி நபர்களுக்கு பட்டா எண் 3179, 9332 மற்றும் 3200 வழங்கிய மாநகராட்சி அதிகாரிகளின் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடவும், அவ்வாறு கொடுக்கப்பட்ட பட்டாக்களை இரத்து செய்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) 11.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் மதுரை மாநகராட்சியின் உதவி வருவாய் அலுவலர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

மதுரை மாநகராட்சி, வார்டு–1, மண்டலம்–2 (வடக்கு) மதுரை விளாங்குடி பிட்1 மற்றும் 2 ல் மாநகராட்சிக்கு சொந்தமான இடமான புல எண்.107/2Aல் (விளாங்குடி–2) புதுவிளாங்குடி பஞ்சாயத்தாக இருந்தபோதே மதுரை வடக்கு வட்டாட்சியர் அலுவலகம் மூலமாக தனி நபர்களுக்கு உட்பிரிவு செய்து பட்டாக்கள் வழங்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேற்கண்ட விவரம் மனுதாரர் மனு அளித்த பின்னரே மாநகராட்சிக்கு தெரிய வந்தது. மேற்கண்ட விவரங்கள் தெரியவந்ததையடுத்து, மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான புல எண்கள் 107/2, 109/8எ, 8C, 10A, 10Cல் மதுரை மாநகராட்சியின் அனுமதியின்றி பட்டா மாறுதல் வழங்கிட ஆட்சேபனை தெரிவித்து வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மதுரை மாநகராட்சியின் இடத்திற்கு வட்டாட்சியரால் பட்டா வழங்கியதை உரிய நோட்டீஸ் அனுப்பி பட்டாவை ரத்து செய்யப்படும் என்பதையும், மேலும் மேற்கண்ட மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் மாநகராட்சிக்கு தெரியாமல் பட்டா பெற்றதை ரத்து செய்திடவும், ஆக்கிரமிப்பாளர்களை 3 மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து அவ்விடத்தைவிட்டு அகற்றிடவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் வாக்குமூலம் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவை

109/8C – 109/10A மற்றும் 109-10C மற்றும் புல எண்.107/2B2 (விளாங்குடி–1) ஆகியவற்றில் மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் (சுமார் 25 சென்ட்) தனி நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு அங்கு 3 வருடங்களுக்கு முன் தனி நபர்களால் வீடுகள் கட்டப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. மாநகராட்சியின் மெத்தனப்போக்கால் பல இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் மதுரை மாநகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

விளாங்குடி பிட் –1 மற்றும் 2ல் மாநகராட்சிக்கு சொந்தமான புல எண் 107-2B/1A மற்றும் 109/8A, 109/8C, 109/10A and 109/10C இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றிடவும் மேற்படி புல எண்களில் தனி நபர்களுக்கு பட்டா எண் 3179, 9332 மற்றும் 3200 வழங்கிய மாநகராட்சி அதிகாரிகளின் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடவும், அவ்வாறு கொடுக்கப்பட்ட பட்டாக்களை இரத்து செய்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

5) 11.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் மதுரை மாநகராட்சியின் உதவி வருவாய் அலுவலர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

மதுரை மாநகராட்சி, வார்டு–1, மண்டலம்–2 (வடக்கு) மதுரை விளாங்குடி பிட்1 மற்றும் 2 ல் மாநகராட்சிக்கு சொந்தமான இடமான புல எண்.107/2Aல் (விளாங்குடி–2) புதுவிளாங்குடி பஞ்சாயத்தாக இருந்தபோதே மதுரை வடக்கு வட்டாட்சியர் அலுவலகம் மூலமாக தனி நபர்களுக்கு உட்பிரிவு செய்து பட்டாக்கள் வழங்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேற்கண்ட விவரம் மனுதாரர் மனு அளித்த பின்னரே மாநகராட்சிக்கு தெரிய வந்தது. மேற்கண்ட விவரங்கள் தெரியவந்ததையடுத்து, மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான புல எண்கள் 107/2, 109/8எ, 8C, 10A, 10Cல் மதுரை மாநகராட்சியின் அனுமதியின்றி பட்டா மாறுதல் வழங்கிட ஆட்சேபனை தெரிவித்து வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மதுரை மாநகராட்சியின் இடத்திற்கு வட்டாட்சியரால் பட்டா வழங்கியதை உரிய நோட்டீஸ் அனுப்பி பட்டாவை ரத்து செய்யப்படும் என்பதையும், மேலும் மேற்கண்ட மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் மாநகராட்சிக்கு தெரியாமல் பட்டா பெற்றதை ரத்து செய்திடவும், ஆக்கிரமிப்பாளர்களை 3 மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து அவ்விடத்தைவிட்டு அகற்றிடவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் வாக்குமூலம் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவை

இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விபரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

மனுதாரர் மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான இடம் தனி நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதால் மதுரை மாநகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் அதற்கு காரணமாக இருந்துள்ள மாநகராட்சி அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார்.

மதுரை மாநகராட்சியின் உதவி வருவாய் அலுவலர் புதுவிளாங்குடி பஞ்சாயத்தாக இருந்தபோதே மதுரை வடக்கு வட்டாட்சியர் அலுவலகம் மூலமாக தனி நபர்களுக்கு உட்பிரிவு செய்து பட்டாக்கள் வழங்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேற்கண்ட விபரம் மனுதாரர் மனு அளித்த பின்னரே மாநகராட்சிக்கு தெரிய வந்தது என மதுரை மாநகராட்சியின் உதவி வருவாய் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இது மாநகராட்சியின் கள அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்களின் கடமை தவறிய செயலாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான புல எண்கள் 107/2, 109/8A, 8C, 10A, 10C–ல் மதுரை மாநகராட்சியின் அனுமதியின்றி பட்டா மாறுதல்கள் வழங்கியதற்கு ஆட்சேபனைகளை மதுரை வடக்கு வருவாய் வட்டாட்சியருக்கும், பட்டா மாறுதல்களை ரத்து செய்ய வேண்டி மதுரை வருவாய் கோட்டாட்சியருக்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதை உதவி ஆணையர் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களை அனைத்து பகுதி மற்றும் மண்டலங்களில் பணியாற்றும் கள அலுவலர்கள் முதல் உதவி ஆணையர் வரையும் ஈடுபடுத்தி ஒரு குறிப்பிட்ட காலவவரையறைக்குள் கணக்கெடுப்பு ஒன்றை நடத்தி ஆவணப்படுத்திட வேண்டும் என்று இம்முறைமன்ற நடுவம் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து ஆணையிடுகிறது. மேலும் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்கள் மீது சட்டப்படியான உரிய குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆக்கிரமித்துள்ள இடங்களை மீட்க நடவடிக்கை மேற்கொள்ளவும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் உத்தரவிடுகிறது.

மேலும் மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் மாநகராட்சிக்கு தெரியாமல் பட்டா பெற்றதை ரத்து செய்திடவும், ஆக்கிரமிப்பாளர்களை 3 மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து அவ்விடத்தை விட்டு அகற்றிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என உதவி வருவாய் அலுவலர் வாக்குமூலத்தில் குறிப்பிட்டபடி மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றிட மண்டலம் –02 வடக்கு உதவி ஆணையாளர் தொடர்ந்து

கண்காணித்து மாநகராட்சி இடத்தை மீட்டு எடுக்க தக்க நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்படுகிறது. இதனை மதுரை மாநகராட்சி துணை ஆணையர் உறுதிப்படுத்திட வேண்டும். நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்புகளை அகற்றாதபட்சத்தில் அதற்கு பொறுப்பான சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் உத்தரவிடுகிறது.

மதுரை மாநகராட்சி ஆணையர் மதுரை மாவட்ட ஆட்சியருடன் தொடர்பு கொண்டு இந்த ஆக்கிரமிப்புகள் அகற்றுவதில் வருவாய்துறையின் ஒத்துழைப்பையும் பெற்று செயல்பட அறிவுறுத்தப்படுகிறார்.

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 01 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு R. மயில்சாமி,
   மனை எண்.5,
   அய்யப்பன்தெரு,
   செம்பருத்தி நகர்,
   புதுவிளாங்குடி, மதுரை–625 018.
2. ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை.
3. துணை ஆணையர், (He is requested to ensure the implementation of this order)
   மதுரை மாநகராட்சி,
   மதுரை.
4. உதவி ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை.
5. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

6. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – **600 028.**

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்